**Tamilmanam International Research Journal of Tamil Studies**
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (Oct 2026), pp. 289–295
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

# கடமை (வரி) உணர்த்தும் பண்பாட்டு மரபுகள். (விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகள் வழி)

**நாகலட்சுமி ர[1,*], முனைவர் . அருள்மொழி ந[2]**

[1] பதிவு எண்: *MKU24FFOL11642,* முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், (தமிழ்), முதுகலைத் தமிழ்த்துறை, தமிழாய்வு மையம், அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி) சிவகாசி., *India*
[2] இணைப்பேராசியர் மற்றும் ஆய்வு நெறியாளர், முதுகலைத் தமிழ்த்துறை , தமிழாய்வு மையம்,அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி *-626 123 ., India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: நாகலட்சுமி ர — kalieswaran816@gmail.com

| Received / பெறப்பட்டது | Revised / திருத்தப்பட்டது | Accepted / ஏற்கப்பட்டது | Published / வெளியிடப்பட்டது |
|---|---|---|---|
| 1 October 2026 | — | 4 October 2026 | 1 October 2026 |

| DOI | Article ID / கட்டுரை எண் |
|---|---|
| — | TAJP-2026-00046 |

**Abstract / ஆய்வுச்சுருக்கம்**

கல்வெட்டுகளில் ‘வரிவிதிப்பு’ என்பது, கடமை, இறை, அந்தராயம் (சிறு வரிகள்) என்று கூறப்படுகிறது. இவ்வரிவிதிப்பு அரசாங்க வருவாய்க்கான சுங்கக் கருவியாகப் பார்க்கப்படவில்லை, குடிகளின் நுகர்வுத் திறன் உற்பத்தியைப் பாதிக்காத வண்ணம் சமூக அற விழுமியங்களோடு பிணைக்கப்பட்ட ஓர் உயர் அறப்பண்பாட்டின் நிதிசார் பண்பாடாகக் கடமை (வரிகள்) இயங்கியதைக் கல்வெட்டுகள் மூலமாக அறியமுடிகின்றது. விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகள் நிலையான வருவாயாக வரிகள் (கடமை) காணப்படாமல் நிலத்தின் விளைச்சலுக்கும் தன்மைக்கும் (கரிசல் நிலம்) ஏற்ப வரி செலுத்தியதை அறியமுடிகிறது. ஒரு சமூகத்தின் மாற்றத்திற்கு வித்திட்ட கடமைகள் (வரி) நிலம் சார்ந்தும், தொழில் சார்ந்தும், வளமை (செல்வந்தர்கள்) சார்ந்தும், வணிகம் சார்ந்தும் விதிக்கப்பட்டிருக்கின்றன. கி.பி. 8-ஆம் நூற்றாண்டு முதல் 20-ஆம் நூற்றாண்டு வரையிலான கால கட்டத்தின் வரிசார்ந்த செய்திகள் தொன்மைக்காலச் சமூகத்தில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தி நின்றது என்பதை ஆய்ந்தறியும் நோக்கில் இவ் ஆய்வுக் கட்டுரை அமையப் பெறுகிறது.

**Keywords / திறவுச்சொற்கள்:** பண்பாடு; மரபு; கல்வெட்டு; விருதுநகர் மாவட்டம்; தொன்மை; கடமை; வரி; பொருளாதாரம்; சமூகம்; நிலம்; வணிகம்.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** ர, நா., & ந, மு. . அ. (2026). கடமை (வரி) உணர்த்தும் பண்பாட்டு மரபுகள். (விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகள் வழி). Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01). https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8720

## முன்னுரை

உற்பத்திப் பொருட்கள் நுகர்வுப் பொருட்களாக மாற்றம் அடைவதற்கு முன்னதாகவே அதனுடைய தரம் நிர்ணயிக்கப்பட்டு அதில் ஒரு பகுதி வரியாக

கொள்ளப்படுகிறது. ஒரே நாடு ஒரே வரி எனும் நவீனமயமாக்கலைத் தற்காலத்தில் காணமுடிகிறது. தொன்மைக்காலத்தில் ஓர் அரசின் வலிமையும் நாட்டின் பொருளாதார நிலைத்தன்மையும் அதன் நிதி மேலாண்மை, வரிக் கொள்கைகளைப் பொறுத்தே அமைந்திருந்தன. கல்வெட்டுகளில் 'வரிவிதிப்பு' என்பது, கடமை, இறை, அந்தராயம் (சிறு வரிகள்) என்று கூறப்படுகிறது. இவ்வரிவிதிப்பு அரசாங்க வருவாய்க்கான சுங்கக் கருவியாகப் பார்க்கப்படவில்லை, குடிகளின் நுகர்வுத் திறன் உற்பத்தியைப் பாதிக்காத வண்ணம் சமூக அற விழுமியங்களோடு பிணைக்கப்பட்ட ஓர் உயர் அறப்பண்பாட்டின் நிதிசார் பண்பாடாகக் கடமை (வரிகள்) இயங்கியதைக் கல்வெட்டுகள் மூலமாக அறியமுடிகின்றது. இந்த அறப்பண்பாட்டை விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகள் கி.பி. 8-ஆம் நூற்றாண்டு முதல் 20-ஆம் நூற்றாண்டு வரையிலான கால கட்டத்தின் வரிசார்ந்த செய்திகள் தொன்மைக்காலச் சமூகத்தில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தி நின்றது என்பதை ஆய்ந்தறியும் நோக்கில் இவ் ஆய்வுக் கட்டுரை அமையப் பெறுகிறது.

**கடமை**

கடமை எனும் அறநெறி வரிக்கொள்கை, சங்க இலக்கியங்களிலும் அற இலக்கியங்களிலும் அரசனின் ஆற்றல்சார் அரசியலைப் பதிவு செய்கின்றன. பொதுமறையாம் திருக்குறளில் வள்ளுவர் பெருந்தகையார்

**"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**

**வகுத்தலும் வல்லது அரசு." (குறள்:385-2025, பக்:115).**

எனும் திருக்குறளில் பொருள் வளத்தைப் பெருக்கி, சேமித்து, பாதுகாத்து, மக்களுக்கு முறையாகப் பகிர்ந்தளிக்கும் உயர் பண்பாட்டை உடையவன் அரசன் எனக் கூறுகிவதை அறியமுடிகிறது. புறவாழ்வியலில் அறத்தைக் கூறும் புறநானூற்றில் புலவர், வெள்ளைக்குடி நாகனார் அரசன் கிள்ளிவளவனுக்கு உரைக்கும் பாடலானது.

**"உணவெனப் படுவது நிலத்தோடு நீரே**

**...வித்திவான் நோக்கும் புன்புலம் கண்ணகன்**

**இறைவன் தாட்குஉத வாதே அதனால் ......**

**நிலன்நெளி மருங்கின் நீர்நிலை பெருகத்....(2023:35, பக்:70).**

எனும் புறப்பாடல் வரிகள் வானம் பார்த்துப் பயிர் செய்யும் நிலம் பரந்து இருந்தாலும் அதை ஆளும் அரசனுக்கு உதவாது அதனால் நிலத்தைக் குடைந்து நீர்நிலையைப் பெருக்குக, என்று கூறுகிறார். இதன்மூலம் இறை பெற நிலம், நீர்நிலை பெருக்கவேண்டும் என்பது புலப்படுகிறது. மேலும் ஆறில் ஒரு பகுதி வரியாகப் பெறுதல் வேந்தனுக்குச் சிறப்பைச் சேர்க்கும் இல்லையேல் **"யானை புகுந்த விளைநிலம் போல"** பாழ்படும் என்ற பிசிராந்தையாரின் பாடல்: (184) கடமை பெறும் முறை குறித்துக் கூறுவது நோக்கத்தக்கது. இவ்வாறாக கி.பி. 8-ஆம் நூற்றாண்டு முதலாக விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகளில் நிதி நிர்வாகத்தில் ஆறில் ஒரு பங்கு வரியாகச் செலுத்தாமல், விளைச்சலின் அளவிற்கு ஏற்பவும், நிலத்தின் தன்மைக்கு ஏற்பவும் மாறும் தன்மை கொண்ட வரிக் கொள்கை விளங்கியதை **"கருஞ்செய்புன்செயும் விலை பிராமணம் பண்ணி" (2009: 90) "...கருஞ்செய் நிலம் எட்டுக் கோலால்..." (2008: 257)** எனும் விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகள் நிலையான வருவாயாக வரிகள் (கடமை) காணப்படாமல் நிலத்தின்

விளைச்சலுக்கும் தன்மைக்கும் (கரிசல் நிலம்) ஏற்ப வரி செலுத்தியதை அறியமுடிகிறது.

### கல்வெட்டுகள் குறிப்பிடும் கடமைகள்

பண்டைக் காலச் சமூகப் பண்பாட்டு வளர்ச்சியை ஒப்பந்தங்கள், ஆவணங்கள், கடமைகள் திட்டங்கள் வழியாகக் காணமுடிகிறது. அரசின் ஆளுமைகளையும் சமூகமயமான வாழ்வியலையும் பொருளாதார மாற்றங்களையும் கல்வெட்டுகள் மூலமாக அறியமுடிகிறது. ஒரு சமூகத்தின் மாற்றத்திற்கு வித்திட்ட கடமைகள் (வரி) நிலம் சார்ந்தும், தொழில் சார்ந்தும், வளமை (செல்வந்தர்கள்) சார்ந்தும், வணிகம் சார்ந்தும் விதிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வரிகளை விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகள் கடமை, அந்தராயம் (சிறு வரிகள்) என்று கூறுவதை அறியமுடிகிறது. **“…கடமை அந்தராயம் ஒன்று கொள்ள…(2009: 86)** எனும் கல்வெட்டு பிற்காலப் பாண்டியர் காலத்தின் (கி.பி.11) மூலம் அறியமுடிகிறது. பல்நிலைச் செயல்பாடுகளுக்குத் தகுந்தாற் போல் பெறப்படும் கடமைகளை **இலாஞ்சினைப்பேறு, நத்தப்பச்சை, பிள்ளையார் நோன்பின் தேவை, ஆனைச்சாரை, கால்தேவை, வீட்டுத்தோவை, புறஉடல், மனைவரி, தறியிறை, தட்டொலி, பாசிப்பாட்டம், வெட்டிப்பாட்டம், பஞ்சுபீலி, சந்திவிக்ரகப்பேறு, வாசல் வினியோகம், காரியவாராட்சி, இனவரி, ஆள்வரி, இடைவரி, ஈழம், ஆண்டெலுத்துத் தேவை, இராசிப்பாசனக் குளிகை, திரமம், வராகன், ஏரியின் பாட்டம், கொற்றிலக்கை, கடைக்கூட்டு இலக்கை, கரைத்தேவை,** முதலான வரிகள் பாண்டியர் காலத்தில் பெறப்பட்ட பண்டைய சமூதாயமாக்களான பண்பாட்டை உணர்த்தி நிற்கிறது.

### தொழில் கடமைகள்

பண்டமாற்று முறை பணப்பரிமாற்றத்தை நோக்கி நகர்ந்த பண்பாட்டில் பல்வகைத் தொழில்கள் கற்றறிந்தனர் தொன்மைக்கால மக்கள். நிலமே தொழில் வளர்ச்சிக்கான முதன்மைக் காரணி. விருதுநகர் மாவட்டம் முல்லை நிலப்பகுதியும் கரிசல் மண்சார் நிலம் ஆதலால் அந்நிலத்தின் விளைச்சலுக்கு ஏற்ப விவசாயம் செய்து, விற்பனைத் தொழில் செய்தனர் என்பதை, விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகள் நிருபிக்கின்றன. **வெட்டிப்பாட்டம்;** ஊர்ப் பொதுப்பணிகளுக்காக (குளம் தூர்வாருதல், அணை கட்டுதல்) பொதுமக்கள் செய்ய வேண்டிய கட்டாயக் கடமை. **பஞ்சுபீலி:** பருத்தியிலிருந்து பஞ்சு எடுக்கும் தொழில், பஞ்சுப் பொதிகளைக் கையாள்வோர் மீது விதிக்கப்பட்ட தொழில் வரி. **இடைவரி:** கால்நடைகளை மேய்க்கும் இடையர்கள் (மேய்ச்சல்) தங்களின் கால்நடை வளர்ப்பு, பால் தொழில் நிமித்தமாக அரசுக்குச் செலுத்தும் வரி. **ஈழம்:** பனை, தென்னை மரங்களிலிருந்து கள் இறக்கும் தொழில் செய்யும் ஈழவர்கள் மீதோ அந்தத் தொழில் சார்ந்த பயன்பாட்டிற்கு விதிக்கப்பட்ட வரி. **ஏரியின் பாட்டம், பாசிப்பாட்டம்:** ஊர்ப் பொது ஏரிகளில் மீன் பிடிப்பதற்கும் ஏரி நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்துவதற்கும் விதிக்கப்பட்ட குத்தகை அல்லது பயன்பாட்டு வரி. **கடைக்கூட்டு இலக்கை:** சந்தைகள், கடைகள் கூடும் இடங்களில் வியாபாரிகளிடம் இருந்து பெறப்பட்ட சந்தை வரி, விற்பனைக் கட்டணம். **தறியிறை:** நெசவுத் தொழில் செய்யும் சாலியர்களின் நெசவுத் தறிகளுக்கு விதிக்கப்பட்ட வரி. **தட்டொலி:** பொற்கொல்லர்கள் (தட்டார்) தங்களின் உலை, பட்டறைத் தொழில் செய்வதற்காக வசூலிக்கப்பட்ட வரி. இவ்வரிகள் அனைத்தும் தொன்மைக்கால மக்களின் உழைப்பின் உயர்வையும் வாழ்வியல் பண்பாட்டையும் எடுத்துக்காட்டுகிறது.

### அரசு நிர்வாகம், பணியாட்கள் கடமை

அரசாங்கத்தின் அன்றாட நிர்வாகச் செலவுகள், அரண்மனைப் பராமரிப்பு போன்ற அரசு அதிகாரிகளின் ஊதியத்திற்காக மக்களிடம் பெறப்பட்ட வரிகள். **சந்திவிக்ரகப்பேறு:** அரசாங்கத்தின் வெளியுறவு போர்க்கால அமைச்சரான **'சந்திவிக்ரகப் பணியாளர்கள்'** பராமரிப்புக்காகவும் அலுவலகச் செலவினங்களுக்காகவும் மக்களிடம் வசூலிக்கப்பட்ட வரி. **வாசல் வினியோகம்:** அரண்மனை, அரசசபையின் தினசரி நிர்வாகச் செலவினங்களுக்காக ஊர் மக்கள் பங்கிட்டுச் செலுத்திய வரி. **காரியவாராட்சி:** அரசாங்கக் காரியங்களை, திட்டங்களைக் கண்காணிக்கும் அதிகாரிகளின் ஊதியத்திற்கும் பராமரிப்பிற்கும் பெறப்பட்ட கட்டணம். **இலாஞ்சினைப்பேறு:** அரசு முத்திரையைப் பயன்படுத்துவதற்கோ, அரசாங்கத்தின் அதிகாரப்பூர்வ முத்திரையிடப்பட்ட சான்றிதழ்கள் ஆவணங்களைப் பெறுவதற்கோ பொதுமக்களிடம் வசூலிக்கப்பட்ட கட்டணம். **ஆண்டெழுத்துத் தேவை:** அரசாங்கத்தின் ஆண்டு கணக்கு வழக்குகளைப் பதிவேட்டில் எழுதும் கணக்கர்கள், எழுத்தர்களின் பணிக்கான கட்டணம். **கொற்றலக்கை:** அரச மாளிகை, கோட்டைக் காவலர்கள் கோயில் பணிபுரியும் கூலியாள்களின் (கொற்றாள்) பராமரிப்பிற்காக வசூலிக்கப்பட்ட வரி. இவ்வரிகள் மூலம் அரசு நிர்வாகத்தின் செயல்பாடுகளும் திட்டங்களும் அதிகார நடைமுறைகளும் மிக நேர்த்தியாக நடைபெற்றதை இவ்வரிகள் புலப்படுத்துகிறது.

### விவசாயம், பாசனம் சார்ந்த கடமை

விவசாய நிலங்களைக் காராண்மை, வாடாக்கடமை (நிலத்தின் மீதான முழு உரிமை) எனும் ஒப்பந்த உரிமையின் மூலம் நிலமற்ற விவசாயிகளிடம் கொடுக்கப்பட்டது. இந்நிலத்தில் கிணறு, குளம், ஏரி, கண்மாய், வாய்க்கால், பள்ளங்கள், கில்லி (சிறு மணல் மேடு) முதலான நீர்ப் பாசனங்களைப் பராமரிப்பதற்காக விதிக்கப்பட்ட வரிகள். **கார்த்திகைப் பொன் பாசனம்:** கார்த்திகை மாதத்தில் விளைச்சலுக்குப் பிறகு பாசன நீர் உரிமைகளுக்காகவும் திருவிழாக் காலங்களில் பொன்னாக அரசுக்கு செலுத்தப்பட்ட பாசன வரி. இதனைக் கல்வெட்டுகளில் **"…பொருப்புல அடைவு நூல் கார்த்திகை மாதத்தில் செலுத்தும் வரி…" (2023: 216)** என்று குறிப்பிடுவதைக் காணமுடிகிறது. **கார்த்திகைப் பச்சை:** கார்த்திகை மாத அறுவடையின் போது விளைந்த புதிய நன்செய், புன்செய் விளைபொருட்களைப் பச்சையாகவோ (தானியமாக), காய்கறிகளாகவோ அரசு கோயிலுக்கு காணிக்கையாகச் செலுத்தும் வரி. **கரைத்தேவை:** ஆறுகள், பாசனக் கால்வாய்களின் கரைகளை உடைப்பெடுக்காமல் பலப்படுத்துவதற்கும் பராமரிப்பதற்கும் உள்ளூர் மக்களிடமிருந்து பெறப்பட்ட வரி. காராண்மையாக நிலத்தைக் கொடுத்து நிலம்சார் நீர்நிலைப்பாசனங்களுக்கும் விளைபொருட்களுக்கும் வரிவிதிக்கப்பட்டதையும் பாசனங்கள் முறைப்படி பராமரிக்கப்பட்டதும் கல்வெட்டுகள் மூலமாகக் காணமுடிகிறது.

### தனிநபர், வணிகக் கடமை

வரிகள் ஒரு சமூகத்தின் வரலாற்றை நம் கண்முன் காட்டும் காலக் கண்ணாடியாக உள்ளது. வணிக வரிகள் பொருளாதாரப் பெருக்கத்தைக் காட்டுவனவாக இருக்கிறது. எனினும் இனவரி தொன்மைக்காலச் சமூகத்தின் பண்பாட்டு வாழ்வியலைக் காட்டுகிறது. **ஆள்வரி:** ஊரிலுள்ள ஒவ்வொரு தனிநபர் மீதும் விதிக்கப்படும் தலைவரி, தலைக்கட்டு. **இனவரி:** குறிப்பிட்ட சமூகக் குழுக்கள், பிரிவினர் மீது விதிக்கப்பட்ட கட்டாய வரி. **கால்தேவை:** கால்நடைகளுக்கான தொழுவ அமைப்பிற்கும் உள்ளூர் கால்நடை வளர்ப்பிற்கும் பெறப்பட்ட வரி.

**புறவாயம்:** வெளியூரில் இருந்து தலைச்சுமையாக ஊருக்குள் விற்பனைக்குக் கொண்டு வரும் பொருட்களின் மீது விதிக்கப்படும் சுங்க வரி. **ஊராயம்:** ஊருக்குள் உள்ள கடைகள், உள்ளூர் வணிக சந்தைகளின் மீது விதிக்கப்படும் பொதுவான விற்பனை, தொழில் வரி இதனை **“....வயலூர் நாட்டு ஆவியூர் உடையார் இராசெந்திர சோளீசுவரமுடைய நாயனார்க்கு இவ்வூரா இசைந்த ஊரோடும் பிடிபாடு பண்ணிக் குடுத்த படியாவது....... ஊரெல்லைக்குள் பட்ட எடுத்(து) நடத்துவன க்கு தலைச் சுமைக்குமுள்ள புறவாயமும் இவ்வூருக்குள் எடுத்தும் தூக்கம் தலைச் சுமைக்குமுள்ள ஊராயமும் ...(2005 : 182)** எனும் கல்வெட்டு எடுத்து நடத்துவன **‘புறவாயம்’** என்றும், எடுத்துத் தூக்கும் சுமை **‘ஊராயம்’** என்றும் கூறுவதை அறியமுடிகிறது. இவ்வரிகள் மூலமாக பொருளாதாரப் பெருக்கத்தை அறியமுடிகிறது.

### கடமை உணர்த்தும் தேவதான இறையிலி

தம்மை வழிநடத்துவபராகவும் ஒன்றிணைந்தவராகவும் இறைவனைக் கண்டனர் தொன்மைச் சமூகத்தினர். தம்முள் இரண்டறக் கலந்த இறைவனை குடும்பத்தில் ஒருவராகப் பாவித்தனர். நிலதானம் கொடுத்து இறைவழிபாட்டிற்கு வலு சேர்த்தனர். இந்நிலம் இறையிலி நிலமாகக் கொடுக்கப்பட்டதை கல்வெட்டுகள் புலப்படுத்துகின்றன. இறை - வரி, இலி - இல்லாதது, வரி இல்லாத நிலமாக உதகபூர்வதானம் (நீர் வார்த்துக் கொடுத்தல் எனும் சடங்கு) செய்து கொடுக்கப்பட்டதை **“...அமுதுபடி சாத்துப்படிக்கும் உதகபூர்வதானம் பண்ணிக்கு டுத்த பூமியாவது...” (2009: 25)** எனும் கல்வெட்டுச் செய்திகள் சான்று பகர்கின்றன. அரசர்கள், அதிகாரிகள், செல்வந்தர்கள், ஊர்சபைகள், வியாபாரிகள், வணிகர்கள் என பலரும் இணைந்து இறைவனின் அன்றாட வழிபாட்டுத் (திருவிழாக்கள், திருப்பணிகளுக்குத்) தேவைகளுக்கு நிலத்தைத் தானமாகக் கொடுத்ததையும் முற்றிலுமாக வரிவிலக்கு செய்யப்பட்டு இறையிலியாக மாற்றப்பட்டதை **“...ஆள்வரி மனைவரி தறியிறை செக்கிறை தட்டொலி தட்டார்ப்பாட்டம் பாசிப்பாட்டம் மற்றும் மெப்பேற்பட்ட அனைத்து உபாதிகளும் உட்பட அந்நாள் முதல் தேவதான இறையிலியாக தந்து வரியிலார் கணக்கிலும் கழிக்கச் சொன்னோம்...” (2009: 141)** எனும் கல்வெட்டு பண்டைய சமூகம் தன்னால் உண்டான செயல்பாடுகள், திட்டங்கள் அனைத்தும் முறையாக கையாண்டிருப்பதை ‘வரியிலார் கணக்கு’ எனும் சொற்கள் மூலமாகக் காணமுடிகிறது. மேலும் இந்த வரியிலார் கணக்கை சூரியன், சந்திரன் உள்ளளவும் **“சந்திராதித்தவற் சொல்வதாக கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொள்க” (2009: 141)** எனும் விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகள் பண்டைய சமூகத்தின் செயல்பாடுகளையும் திட்டங்களையும் ஒழுகலாறுகளையும் உச்சிதமாகக் காட்சிப்படுத்தி நிற்கின்றன. குடிநீங்கா முறைகளில் பண்பாடு பழநடைகளாக (தொடர்ந்து) மக்களிடம் நிலம் இருந்ததைக் கல்வெட்டுகள் மூலமாக அறியமுடிகிறது. இந்நிலத்தில் விளைச்சலைப் பொறுத்து மக்கள் கொடுத்த கொடையாக **“...நெல்லு இருகலனே தூணிபதக்கும் குறுவைவிளைந்த நிலத்துக்கு இவ்வரிசையில் ஒன்றும் பாதியும் தினை வரகு...நிலத்துக்கு மாத்தால் திரமம் அரையும் கருஞ்சொய் விளைந்த நிலத்துக்கு மாத்தால் திரமம் ஒன்றும்...” (2009: 98)** எனும் கல்வெட்டு பண்டைய அளவைகளின் அடிப்படையில் **1 பதக்கு என்பது 2 குறுணி = 16 படி, 1 தூணி என்பது 2 பதக்கு = 32 படி, 1 கலன் என்பது 3 தூணி = 96 படி, ‘இருகலனே தூணிப்பதக்கு’ (2 கலன் + 1 தூணி + 1 பதக்கு) 2 கலன் என்பது 192 படி, 1தூணி, 32 படி, 1 பதக்கு 16 படி, மொத்தம் = 240 படி (நாழி). (தமிழ்**

**கல்வெட்டுச் சொல்லகராதி)** இவ்வளவை முறைகளில் ஒன்றும் பாதியும் எனும் சொல் நோக்கத்தக்கது. தினை, வரகு விளைந்த நிலத்துக்குத் திரமம் (நாணயம்) அரையும், கருஞ்செய் விளைந்த நிலத்துக்கு நில அளவையின் படி (மாத்தால்) திரமம் ஒன்றும் என்ற அளவீட்டின் முறையில் நிலத்தின் விளைச்சலுக்கு ஏற்ப கோயிலுக்கு வரிகள் செலுத்தப்பட்டதை அறியமுடிகிறது. இதனால் விவசாயிகள் தங்கள் பொருளாதார வளமையைப் பெருக்கிக் கொள்ளவும் ஏற்றுமதி, இறக்குமதி சார்ந்த பொருளாதாரமும் வணிகர்களின் வரத்தும் அதிகரித்து, அங்கு பன்முகப் பொருட்கள் இறக்குமதி, ஏற்றுமதி ஆனதை **"...தலைச் சுமைக்குமுள்ள புறவாயமும் இவ்வூருக்குள் எடுத்தும் தூக்கும் தலைச் சுமைக்குமுள்ள ஊராயமும்..." (2008: 176)** எனும் கல்வெட்டு பொருளாதாரப் பெருக்கத்திற்கு வழி வகுத்ததை கி.பி. 8 – ஆம் நூற்றாண்டு முதல் 20 – ஆம் நூற்றாண்டு வரையிலான கல்வெட்டுகளில் காணமுடிகிறது. இதனை **"...இராசிபாசன குளிகைப் பணம் ருள இப்பணம் ஐந்நூறும் கையிலே பற்றிக் கொண்டு..." (2008: 176)** எனும் கல்வெட்டுகள் மூலமாக அறியமுடிகிறது. **இராசிப்பணம், இராம இராசன் குளிகை, திரமம்** என்பவை பிற்காலப் பாண்டியர் காலத்தில் புழக்கத்தில் இருந்த அதிகாரப்பூர்வ தங்க நாணயங்கள் ஆகும். நிலத்தின் மதிப்பை நாணயங்களின் அடிப்படையில் துல்லியமாகக் கணக்கிட்டு 500 இராசிப்பணம் ரொக்கமாகக் கையிலே நேரடியாகப் பெற்றுக் கொண்டுள்ளனர் என்பது கல்வெட்டுகள் பொருளாதாரப் பண்பாட்டுப் பெருக்கத்தின் நிலையைப் புலப்படுத்தி நிற்பதையும் **'இறையிலி'** திட்டத்தினால் வரியைக் குறைத்து வர்த்தகத்தைப் பெருக்கும் மிகச்சிறந்த பண்டைக் காலப் பொருளாதாரப் பண்பாட்டு உத்தியாக நிறுவி நிற்பதை ஆய்ந்து அறியமுடிகின்றது.

## முடிவுரை

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும் ஆகிய பண்புடன் அரசனும் நிர்வாகங்களும் செயல்பட்டதைக் காணமுடிகிறது. விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகளில் இறையிலி நிலங்கள் மூலமாக ஒரு சமூகத்தின் கடமைகளையும் திட்டங்களையும் செயல்பாடுகளையும் அறிந்து கொள்ள முடிகிறது. வரி நீக்கம் என்பது, ஒரு இடத்தில் தேங்கச் செய்வதாக இல்லாமல், தொடர்ந்து தன் கடமைப் பணியை ஆற்றத் தூண்டும் மரபாகக் காணமுடிகிறது. நிலமற்ற விவசாயப் பெருமக்களுக்கும் காராண்மையாக நில உரிமை கொடுத்ததும் இந்நிலத்தை இறையிலி நிலமாக மாற்றி அவர்கள் வாழ்வியல் வளமைக்கு வழிவகுத்ததும் உயர் அறப் பண்பாட்டு மரபாகக் காணமுடிகின்றது. பண்டமாற்று முறையை ஒழித்து முதிர்ச்சியடைந்த பணப்பரி மாற்றத்திற்கு அடித்தளமிட்ட வணிகர் பெருமக்கள் மூலமாக கி.பி.8-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.20- ஆம் நூற்றாண்டு வரையிலான 1200 ஆண்டுகால பொருளாதாரப் பண்பாட்டை விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகள் வரிகள் வழியாக நிறுவி நிற்பதைக் காணமுடிகின்றது. வரியைக் குறைத்து வர்த்தகத்தைப் பெருக்கும் பண்டைக் காலத் திட்டங்களை உய்த்து உணரமுடிகிறது.

துணை நின்றவை


1 முனைவர் சீதாராம் குருமூர்த்தி. விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி 1. தமிழ்நாடு அரசு தொல்லியல்துற, சென்னை எழும்பூர் -2008.

2 முனைவர் தி.ஸ்ரீ. ஸ்ரீதர். விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி 2. தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை எழும்பூர் -2009.

3 சுப்பராயலு, எ. South Indian Inscriptions: Studies in Social and Economic History.

ஆக்ஸ்போர்டு யுனிவர்சிட்டி பிரஸ். புது தில்லி: (2011).

4 அப்பாதுரை, ஏ. Political Economy of a South Indian Temple. ஓரியண்ட் லாங்மேன். சென்னை: (1981).

5 ஸ்டெய்ன், பர்டன். Peasant State and Society in Medieval South India. ஆக்ஸ்போர்டு யுனிவர்சிட்டி, புது தில்லி: (1980).

6 இராமன், கே. வி. பாண்டியர் வரலாறு. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம். சென்னை: (1977).

7 சதாசிவ பண்டாரத்தார், தி. வை. பாண்டியர் வரலாறு. தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம். சென்னை: (1954).

8 தமிழ்ச் சமுகத்தில் வரி - 2 https://share.google/5l8g3mr8nvAO0jXyZ

9 வ. த. இராமசுப்ரமணியன் எம்,ஏ. புறநானூறு (மூலமும் தெளிவுரையும்) திருமகள் நிலையம், தி.நகர், சென்னை -2017

© 2026 நாகலட்சுமி ர, முனைவர் . அருள்மொழி ந. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..